ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிலப்பதிகாரத்தில் அறச்சிந்தனைகள்

88

முனைவர்.சு.முருக லெட்சுமி,
உதவிப்பேராசிரியர்,ஏ. பி. சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி.

ஆய்வுச் சுருக்கம் :

அறம் என்பது மனிதனை நல்வழிப்படுத்துவது இவ்வகையில் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அறங்கள் நல்வாழ்வுக்கு வழி காட்டுவனவாக அமைந்துள்ளன. சிலப்பதிகாரம் அறநெறிகளின் அரும் பெரும் களஞ்சியமாகவும் அறநெறிக் கருத்து கருவூலமாகவும் திகழ்கிறது. சிலப்பதிகாரத்தை அறவியல் காப்பியம் என்பதும் மிகவும் பொருத்தமானது ஆகும். கோவலன், கண்ணகி, பாண்டியன் போன்றவர்களின் வாழ்க்கை அறம் சார்ந்துள்ளது. மனிதனின் மனத்தை அறத்தின் பால் கொண்டு செல்லவும், தவறு செய்பவர்களை தண்டிக்கும் வகையில் ஐம்பெரும் மன்றங்களை இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.

முன்னுரை:

காவியம் என்ற வடசொல்லின் திரிபே காப்பியம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருளையும், கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுட்களையே காப்பியம் என்று கூறுகிறோம். ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியமாக கருதப்படுகிறது. காப்பியத்தில் முதன்மை பெறும் சிலப்பதிகாரம் உணர்ச்சிகளின் மையமாக விளங்குவதால், 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியார் பாராட்டுகிறார். இயல்,இசை,நாடகம் என்னும் முத்தமிழையும் தன்னகத்தேக் கொண்டது. உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளால் விளங்குவது. தமிழரின் அகம்,புறம் வாழ்க்கையின் கருவூலமாகவும் திகழ்கிறது. இத்தகைய சிறப்பு பெற்ற இந்நூலில் அறச் சிந்தனைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறம் விளக்கம்:

ஒருவர் குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் ஒழுக்கமாக வாழ்ந்து மற்றவர்களுக்கு தன்னால் முடிந்த உதவியை செய்வது அறம் ஆகும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற' (குறள்.34) குற்றம் இல்லாமல் தூய்மையாக தெளிவாக இருப்பதை அறம் என்கிறார் வள்ளுவர். தொல்காப்பியர் "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" (தொல்.கள.நூ.89) என்கிறார். அறத்தினால் பொருளை ஈட்டி அப்பொருளில் இன்பம் நுகர்வது மக்கள் வாழ்க்கை என்று கூறுகிறார். இன்பத்தில் இருந்து அறத்தை வேறாகக் காட்டுதல் இயலாது என்கிறார். கழகத் தமிழ் அகராதி அறம் என்பதற்கு கடமை, தர்மம், கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியம், அறநூல், அறக்கடவுள் என்னும் பொருள்களை தருகிறது.

சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்:

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திற்கு பல்வேறு பெயர்கள் உண்டு. உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள், குடிமக்கள் காப்பியம், புரட்சிக் காப்பியம் போன்ற பல்வேறு பெயர்களால் பாராட்டப்படுகிறது. தமிழில் முதல் காப்பியம் ஆகவும் முதன்மை காப்பியமாகவும் விளங்கும் சிலப்பதிகாரத்தை அறவியல் காப்பியம் என்பதும் மிகவும் பொருத்தமானதாகும்.

அறநெறிகளின் களஞ்சியம்:

சிலப்பதிகாரம் அறநெறிகளின் அரும் பெரும் களஞ்சியமாகவும் அறநெறிக் கருத்துக் கருவூலமாகவும் திகழ்கிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒப்பற்ற அறவியல் காப்பியம் சிலப்பதிகாரம் மட்டுமே. பிற காப்பியங்கள் ஏதேனும் ஒரு சமய நெறிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை. சிலப்பதிகாரம் மட்டும்தான் அனைத்துச் சமய நெறிகளையும், எல்லோருக்குமான பொது நெறிமுறைகளையும்,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

காப்பியத்தின் இறுதியில் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது. சிலம்பின் இறுதி அடிகளே இக்காப்பியம் அறவியல் காப்பியம் என்பதை தெளிவுபடுத்தும். மேலும் சிலப்பதிகாரத்தில் "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பதும் என்ற மூன்று அறங்களை இளங்கோவடிகள் வலியுறுத்துகிறார். மேலும் அறனென்றும் மடவோய் (துன்ப மாலை) அறக்களத்து அந்தணர் (அழற்படு காதை),அறக்கள வேள்வி (நடுகற் காதை) அறம்புரி மாந்தர் (புறஞ்சேரி இறுத்த காதை) இங்கனம் அறம் தொடர்பான இன்னும் பல்வேறு சொற்கள் இடம் பெறுவதை அறியலாம்.

ஐம்பெரும் மன்றங்கள்:

மனிதனின் மனத்தை அறத்தின் பால் கொண்டு செல்லவும், தவறு செய்பவர்களை தண்டிக்கும் வகையில் ஐம்பெரும் மன்றங்களை உருவாக்கினார் இளங்கோவடிகள்.

"மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ"
-(இந்திர விழவுஊர்எடுத்த காதை.139-140)

என்கிறார்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"
-(குறள்.734)

என்பது வள்ளுவர் வாக்காகும்.

மக்களை நல்வழிப் படுத்தவும் துன்பங்கள் நிறைந்த மக்களுக்கு துன்பங்கள் நீங்கவும், தீய ஒழுக்கங்கள் உடையவர்களை தண்டிக்கவும், அரசநீதி தவறும்போது அதை உயர்த்தும் முறையில் ஐவகை மன்றங்கள் புகார் நகரத்தில் இருந்தன என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. அவை, வெள்ளிடை மன்றம் இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச் சதுக்க மன்றம்,பாவை மன்றம் ஆகிய ஐந்தாகும்.

கண்ணகியின் அறம்:

கோவலனைப் பிரிந்த கண்ணகி இல்லறத்திற்குரிய அறமாகிய 'அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்' என அறவழி செல்வோர்க்கு உணவு அளித்தல், அந்தணர்களைப் பேணுதல், விருந்தினர்களை உபசரித்தல் போன்ற அறங்களைச் செய்ய இயலாததை எண்ணி வருந்தினாள். கோவலன் கண்ணகியை பிரிந்து மாதவியின் பால் அனைத்து செல்வங்களை இழந்து மீண்டும் தன் இல்லம் வந்தான்.

"நலம் கேள் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்புள கொண்ம் எனச்
சேயிழை கேள்"
-(கனாத்திறம் உரைத்த காதை 73-74)

என்று கண்ணகி புன்முறுவலோடு கோவலனை வரவேற்றாள். வருந்தும் தன் கணவனுக்குச் சிலம்பைத் தந்தாள்.

"கடிமலர் அங்கையில் காதலன் அடிநீர்
..........
குமரி வாழையின் குருத்தகம் விரித்து ஈங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கு என"



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

(கொலைக் களக்காதை 38,41,42)

கண்ணகி தன் கணவனின் திருவடிகளை கழுவி அமரச் செய்து மண்மகள் மீது நீர் தெளித்து குருத்து வாழை இலை விரித்து உணவு இட்டு உண்ணுமாறு கூறுமிடத்து,

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகி யாரென் கணவனை யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"
-(குறுந்தொகை 135)

என்னும் சங்க இலக்கிய பாடல் வழி கண்ணகியின் இல்லறம் உள்ளது. தன் இறந்த கணவனுக்கு அறம் வேண்டி மன்னனிடம்,

"தேரா மன்னா செப்புவது உடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள் உறு புன்கண் தீர்த்தோன்
பெரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்"
-(வழக்குரைக் காதை 49,50,55)

என உலகோர் வியக்கும் வண்ணம் ஒரு புறாவின் துன்பத்தைப் போக்க தன் உடலை வருத்திக் கொண்டவரும், பசுவின் துன்பத்தைப் போக்க தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழன் வாழ்ந்த நகரில் இருந்து வந்து, வாழ்தல் வேண்டி ஊழ்வினை துறப்ப வாணிகம் செய்ய வந்த கணவனை கள்வன் என்று கூறி கொலை செய்தது எவ்வகையில் நீதியாகும் என வினவுகிறாள்.

அதற்கு பாண்டிய மன்னன் கண்ணகியிடம் 'கள்வனைக் கோரல் கடுங்கோல் அன்று' என்றவிடத்து என் கால் சிலம்பில் உள்ளவை மாணிக்கப் பரல்கள் என்றாள். மன்னன் என்னுடையது முத்துப் பரல்கள் என்ற கூறிய பின் கோவலனிடம் பெற்ற சிலம்பைக் கண்ணகியிடம் தருமாறு கூறினான். அச்சிலம்பை எடுத்து கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப மன்னவன் வாய் முதல் தெறித்தது மணியே. கண்ணகி தரையில் வீச அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப் பரல் மன்னன் வாயில் தெறிக்க மண்ணில் வீழ்ந்தான். கோபமுற்ற கண்ணகி வஞ்சினமாகக் கூறி தன் இட முலையைத் திருகி மதுரையின் மீது எறிய அக்கினி தெய்வம் தோன்றி மதுரையை எரிக்கும் முன் யாரெல்லாம் தீ தீண்டாமல் இருக்க வேண்டும் என வினவ,

"பார்ப்பார் அறவோர் பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைவிட்டு
தீத் திறத்தோர் பக்கமே சேர்க"
-(வஞ்சின மாலை53-56)

அந்தணர்,அறவோர்,பசுக்கள், கற்புடைப் பெண்டிர், முதியவர்கள், குழந்தைகளை விடுத்து தீயவர்கள் பக்கம் தீப்பற்றி எரியட்டும் என்று கூறினாள் கண்ணகி. அவ்வாறே மதுரையும் எரிந்தது.

கோவலனின் அறம்:

இளங்கோவடிகள் கோவலனை சமூகத்தில் உயர்ந்த மனிதனாகக் காட்டுகிறார். முன் வினையின் காரணமாக மனைவியைப் பிரிந்து பரத்தையிடம் பொருளிழந்து மனைவியோடு இணைகிறான். மதுரையில் பொற்கொல்லனின் திருட்டுத்தனத்தால் கொலையுண்டான் கோவலன். கொலைக்களக் காதையில் கண்ணகியிடம் தான் தீவினையாலோ பரத்தையரோடு கூடி, ஊரார் பேச்சுக்கு ஆளாகி உனக்கு சிறுமையும் பெற்றோர்களின் பேச்சை மீறிய எனக்கு,ஒழுக்கத்தை

"பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

நச்சுக் கொன்றேற்கு உண்டோ”
-(கொலைக்களக்காதை 65-66)
எனத் தன் தவறை உணர்ந்து கூறுகிறார் கோவலன்.
“எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நலனே” -(புறம்.181)
எனும் புறநானூற்று பாடலுக்கு ஏற்றாற்போல கோவலனின் பண்பை அடைக்கலக் காதையில் மாடலன் வாயிலாக இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார். கருணை மறவன், சொல்லாச் செல்வனாக கோவலனை காட்டுகிறார் இளங்கோவடிகள்.

பாண்டிய மன்னனின் அறம்:

நன்றாக ஆட்சி செய்து வந்த பாண்டிய மன்னன் பொற்கொல்லனின் பொய்யான செய்தியைக் கேட்டு கோவலனைக் கொன்றான். கண்ணகியின் உரையைக் கேட்டு,
“யானோ அரசன் யானே கள்வன்?
மன்பதைக் காக்கும் தென்புலக் காவல்
என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்”
-(வழக்குரைக்காதை75-77)
என்று கூறி மன்னர் அரியணையில் இருந்து கீழே விழுந்து இறந்து தன் அறத்தை நிலை நாட்டினான். அவனுடைய அரசியோ தன் கற்பு ஒழுக்கத்தை
“கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று
இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி”
-(வழக்குரைக்காதை 79-80)
மன்னன் நிலத்தில் விழுந்ததும், கணவனை இறந்தவர்களுக்கு புகழிடம் எதுவும் இல்லை எனக் கூறி உடனே தானும் கீழே வீழ்ந்து இறந்தாள் பாண்டிமாதேவி.

இளங்கோவின் எண்ணம் வெளிப்படுதல்:

சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகளின் வாயிலாகவும் அறத்தை வலியுறுத்துகிறார். காப்பியத்தின் இறுதியான வரந்தரு காதையில் தன் எண்ணத்தை பதிவு செய்கிறார். கண்ணகியின் வரலாற்றைக் கூறி மனிதன் அடைய வேண்டியவற்றை,
“பரிவும் இடுக்கனும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
………… இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா” -(வரந்தரு காதை186,187,199)
என பிறருக்கு கவலையும் துன்பத்தையும் தருவதை முறையாக விட்டு ஒழியுங்கள், தெய்வம் உண்டு என்பதை தெளிவாக உணருங்கள், கடவுளை உணர்ந்தோரை பேணுங்கள், பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள், புறம் கூறுதலை நீக்குங்கள், ஊன் உண்பதைத் துறந்து விடுங்கள், பிற உயிர்களைக் கொல்லாதீர், தானங்கள் செய்க, தவ நெறி மேற்கொள்ளுங்கள், பிறர் செய்த உதவியை மறவாதீர், தீய நட்பை இகழ்ந்து ஒதுக்குங்கள்,பொய் கூறப் போகாதீர், பொருள் பொதிந்த உண்மை மொழியை விட்டு விடாதீர்கள், அற வழி சொல்லும் சான்றோர் அவைக் களத்திற்கு அகலாது செல்லுங்கள்,தீயோர் கூட்டத்திற்கு மறந்தும் கூட போய் விடாதீர்கள், பிறர் மனைவியை விரும்புதலை அஞ்சி ஒதுக்குங்கள், துன்பமுற்ற உயிர்களை காப்பாற்றுங்கள், இல்லறத்தையும், அறச்சாலைகளையும் காப்பாற்றுங்கள், தீயவற்றை நீக்குங்கள், கள்,களவு, காமம், பொய், பயனற்ற பேச்சு இவற்றை அதற்குரிய உபாயத்தால் உறுதியோடு ஒழித்து விடுங்கள். இளமை, செல்வம், யாக்கை நிலையற்றது என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

முடிவுரை:


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

சிலப்பதிகாரத்தில் காணப்படும் அற செய்திகள் அரசியல் நெறிமுறைகளையும் அற ஒழுக்கங்களையும் சிறப்புடன் இடம் பெற்றுள்ளது. பொது வாழ்க்கையில் உள்ள ஒரு மன்னனின் அறியாமையினால் அவனும் அவன் நாடும் அழிவதும், அரசர் அருளறம் பூண்டால் நாட்டில் குற்றங்கள் நிகழாது என்பதையும், ஊழ்வினையின் பயன் காரணமாக கோவலனுக்கு ஏற்பட்ட நிலைமையையும் சிறந்த அறங்களாக சிலப்பதிகாரம் தெளிவுபடுத்துகிறது. இதில் கூறப்பட்ட அறநெறிகளை வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பின்பற்றினால், எவ்வித தீமையும் ஏற்படாது என்பதை, “அறத்தான் வருவதே இன்பம்” என்பதை உணர்ந்து சிலம்பு காட்டும் அறச் சிந்தனைகளை பின்பற்றுவோமாக.

துணைநூற்பட்டியல்:

1. திருக்குறள்,திருவள்ளுவர், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.

2. புறநானூறு, புலியூர் கேசிகன் உரை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

3. சிலப்பதிகாரம்,புலியூர் கேசிகன் உரை,நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

4. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை,சாரதா பதிப்பகம்,சென்னை.